
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 MAY 1956
511
2-56
511

# பூதான ஜோதி

குமாரி விமலா தக்கர்



ஆச்சார்ய விநோபா

...கய பிரசுராலயம், தஞ்சாவூர்

விலை அணா 2

YZWN95.
N56.
223159.

63-2

பூதான பிரசுரம் நெ. T-46/1,70,000

★

ஆச்சார்ய விநோபாஜியின் முக்கிய சிஷ்யை குமாரி விமலா தக்கர். இவர் தமிழ் நாட்டில் பலமுறை பூதான யாத்திரையில் கலந்து கொண்டிருக்கிறார். இவர் பேச்சைக் கேட்டு மனம் மாறி அனேகர் நிலதானம் செய்திருக்கிறார்கள். பூதான உலகத்தில் குமாரி விமலாவைத் தெரியாதவர் இரார்.

இவர் எம். ஏ. படித்தவர். அமெரிக்கா முதலிய வெளிநாடுகளில் பிரயாணம் செய்திருக்கிறார். பொருளாதார சாஸ்திரத்தில் பாண்டித்தியம் உள்ளவர். உண்மையான கடவுள் பக்தியால் பூதானத்தில் இழுக்கப்பட்டவர்.

இந்தூரில் பூதான யாத்திரையில் அவர் செய்த ஒரு பிரசங்கத்தின் மொழிபெயர்ப்பே இது. இதை மொழிபெயர்த்தவர், பூதான நாடகம் எழுதிய வாலிபர் ஸ்ரீ எ. வெங்கட்டராமன்.

பூதானத்தில் அடிப்படைக் கருத்துக்களை விளக்குவதுடன், தனது யாத்திரையில் ஏற்பட்ட மனமுருக்கும் அனுபவங்களையும் குமாரி விமலா வர்ணித்துள்ளார்.

இது இரண்டாம் பதிப்பு.

தஞ்சாவூர் 26—4—56 } சர்வோதய பிரசுராலயம், (அகில பாரத சர்வ சேவா சங்கம்)

# பூதான ஜோதி

★

223159

பூதான இயக்கம், தேச விடுதலைக்குப்பிறகு, இந்நாட்டிலிருந்து ஏழ்மையையும், முதலாளித்துவத்தையும், ஒழிப்பதற்காக, அஹிம்சை, சத்தியாக்கிரக முறையில் ஏற்பட்ட ஒரு பெருமை வாய்ந்த இயக்கம். நான் தேசத்தில் யாத்திரை செய்யும்பொழுது இங்கு படித்த மக்களே இது வரையில் இந்த இயக்கத்தின் பெருமையைப் புரிந்து கொள்ளவில்லை; சிந்திப்பதற்கு சமயத்தையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்பதை அறிகிறேன். அவர்கள், இது காந்தீயத்தை வெற்றிபெறச் செய்கின்ற இயக்கம்; கம்யூனிசத்தை தாமதிக்க வைக்கின்ற—கம்யூனிசம் பரவாமல் தடுக்கின்ற இயக்கம் என்று கருதுகிறார்கள். சிலர் தான தருமம் என்ற பெயரால் நிலத்தைப் பெற்று, பிரித்துக் கொடுக்கின்ற இயக்கமே இது! என்று எண்ணுகிறார்கள். இது எந்த இயக்கத்தையும் பின்பற்றுவதுமல்ல; வேறெதையும் எதிர்ப்பதும் அல்ல.

### பாரத மண்ணின் சரியான பதில்

இந்த இயக்கம் நிலத்தைப்பெற்று பிரித்துக் கொடுக்கும் இயக்க மட்டுமல்ல. இன்று நம்முடைய நாட்டில் எழுந்துள்ள அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக பாரத நிலத்திலிருந்து எழுந்திருக்கின்ற சரியான பதிலுமாகும். வினோபாஜி மகிமை வாய்ந்த பெரியாராக இல்லாவிட்டால், அவருடைய கொள்கை நமது தேசிய பிரச்னைகளோடு ஒத்திருக்காது; இன்றுள்ள சூழ்நிலையில், அதற்கு ஆர்வமோ, அவசியமோ இருக்காது; அது நாடு முழுவதிலும் ஒரு புதிய சக்தியை—உற்சாகத்தை ஊட்டி இருக்காது; இந்த நான்கு

ஆண்டுகளாக அவர் இந்த நாட்டில் காண்பித்திருக்கின்ற—பரப்பி வருகின்ற தத்துவம் உலகம் முழுவதும் பரவியிருக்காது

## பிரச்னையின் மூன்றுவித உருவங்கள்

நம்முடைய நாட்டுப் பிரச்னை மூன்றுவிதமானது. நாம் விடுதலைப் பெற்ற பிறகு, நன்றாகப் புரிந்துகொண்டு, முழு மனதோடு ஜனநாயகக் குடியரசை யமைத்தோம். நாம் இந்தக் குடியரசை எப்படிக் காப்பாற்றி நிலையாக வைத்திருப்பது என்பது, இன்று நம்முடைய நாட்டின் முன்னுள்ள முதலாவது தலையாய அரசியல் பிரச்னை. உலகிலேயே, அனைத்தையும் விடச் சிறந்த ஜனநாயக நாடுகளான இங்கிலாந்தும், அமெரிக்காவும்—இதுபோன்றே இன்னும் சில நாடுகளும் நிலையாக ஜனநாயகத்தைக் காப்பாற்றி வைத்துக்கொள்ள இயலவில்லை. காரணர், அங்கு ஜனநாயகத்தின் மூலமாக ஏழ்மையும், முதலாளித்துவமும் ஒழிக்கப்படவில்லை. சமுதாயத்தில் சுயநலமிகளுக்கு எதிராக எழும் பகைமைக்கு அவர்கள் பரிகாரம் தேடாமையால் ஜனநாயகத்தை நிலையாக வைத்துக் கொள்ள முடியவில்லை. ஏழ்மையும்—முதலாளித்துவமும் இருக்கும் வரையில் ஜனநாயகம் பெயரளவில்தான் இருக்குமே தவிர, உண்மையானதாக இருக்காது. ஜனநாயகத்தை காப்பாற்றிக் கொள்வதற்காக அந்த நாட்டு தலைவர்கள் மக்களுக்கு முன்னால் கம்யூனிச எதிர்ப்பு என்ற பூதத்தைக் காட்டுமாறு நேர்கிறது. எந்த நாடுகளில் ஏழ்மை ஒழிக்கப்பட்டதோ—பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அழிக்கப்பட்டதோ அந்த நாடுகளிலும் ஜனநாயகம் நிலைத்திருக்கவில்லை. மக்கள் ஜனநாயகத்தைக் கைகழுவிவிட்டார்கள். ஜனநாயகத்தின் மூலம் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை ஒழிப்பது என்பது இயலாத காரியம் என்பது உலக சிந்தனையாளர்களின் ஒரு மனப்பட்ட முடிவு. பாரதம் ஜனநாயகத்தின் மூலம் ஏழ்மையையும், முதலாளித்துவத்தையும் ஒழிக்க

சென்னை-600 008

முடியுமா? கொடுமையையும் சுரண்டலையும் நீக்க முடியுமா? ஏழ்மையும், முதலாளித்துவமும்—கொடுமையும், சுரண்டலும் அழியாத வரையில் ஜனநாயகம் நிலைக்காது என்பது வெளிப்படை. நாம் ஜனநாயகத்தை நிலையாக வைத்துக் கொள்ள வேண்டும். அதோடு அதன் மூலம் ஏழ்மை, முதலாளித்துவம் இரண்டையும் நீக்கவேண்டும். இந்தப் பிரச்னையின் கலாச்சார அம்சமாக ஏழ்மையையும், முதலாளித்துவத்தையும் ஒழிப்பதற்காக மனித மதிப்பையும்—தன்மையையும் நிலைநாட்டக் கூடிய ஒரு சக்தியைப் பயன்படுத்தவேண்டும்.

## புதிய சாதனம் தேவை

இன்று வரையில் உலகத்தில் எவ்வளவோ புரட்சிகள் நடந்திருக்கின்றன. சமுதாய மாற்றத்திற்காக நடந்த இந்தப் புரட்சிகளில் எல்லாம் எவ்வளவோ மக்கள் பலி கொடுக்கப்பட்டார்கள்; எத்தனையோ கொலைகள் நடந்தன; பெரிய அளவில் இரத்தப்பெருக்கு நிகழ்ந்தது. ஆனால் இன்று உலக சமுதாய மாற்றத்தோடு தனி மனிதனுடைய வாழ்வும் மாற்றமடையக் கூடிய ஒரு சாதனத்தை எதிர்நோக்கி நிற்கிறது. இந்த மாற்றம் பலாத்காரமின்றி—பிறருடைய வற்புறுத்தலில்லாமல் மனிதன் தானே மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். சரித்திர ஏடுகளிலிருந்து நாம், மனிதனுடைய வாழ்வில் சுதந்திரமான மாற்றம் ஏற்படாத வரையில் எதிர் புரட்சி ஏற்படும் என்ற பயம் அரசாங்கத்திற்கு இருந்துகொண்டேதான் இருக்கும், என்பதை அறிந்திருக்கிறோம்.

## எதிர்புரட்சி ஏற்படும் என்ற சந்தேகம்

சுமார் முப்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்னால் ருஷ்யாவில், அங்கிருந்தப் புரட்சிக்காரர்கள் ஒரு மகத்தான சாதனத்தை உபயோகித்தார்கள். அவர்கள் என்ன பயமற்றவர்களா? கருணையற்றவர்களா? இதயமில்லாதவர்களா? குழந்தை

—குட்டியற்றவர்களா? இல்லை. இவர்கள் எல்லாம் உடையவர்கள்தான்! ஆனால் சமுதாயம் மாறுவதற்காக முதலில் மேலாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவோம். பிறகு சட்டத்தின் உதவியால் இம்சை சக்தியின் மூலம் ஆயுத பலத்தின் துணைகொண்டு மனிதனுடைய உள்ளத்தையும், அறிவையும் மாற்றிவிடலாம் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் அரசாங்க விருப்பப்படி கலைஞர்களும், வித்வான்களும், விஞ்ஞானிகளும் இங்கு இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் எதிர்புரட்சி ஏற்படுமோ என்ற பயம் ருஷ்ய அரசாங்கத்திற்கு இருந்துகொண்டே இருக்கிறது. பெரியா, மெலங்கோவ், மாலடோவ் முதலியவர்கள் ஸ்டாலின் வாழ்ந்த நாளில் அவருடைய நெருங்கிய நண்பர்களாயிருந்தார்கள். பொறுப்பான பதவி வகித்தவர்கள்; ஆனால் ஸ்டாலின் இறந்த சில மாதங்களுக்கெல்லாம் பெரியாவை இராஜத்துரோகி என்று கூறிக் கொன்றுவிட்டார்கள். மக்களுடைய அரசாங்கம் —மக்களுடைய நாடாக இருந்தாலும் அங்கும் எதிர்புரட்சி ஏற்படும்! என்ற பயம் இருந்துகொண்டே இருக்கிறது. பலாத்காரத்தின் விளைவு இது. இதை நீங்கள் புரட்சி என்று கூறுவீர்கள்?

**சரியானப் புரட்சி**

புரட்சியின் மூலம் மக்களுடைய உள்ளத்திலும் அறிவிலும் மாற்றமுண்டாக்க வேண்டும் என்பதே நமது கருத்து. சமுதாய வாழ்வில் ஒரு மகத்தான மாற்றம் ஏற்படுத்த வேண்டும். நமது இயக்கத்தினால் மனிதனுடைய உள்ளத்தையும் அறிவையும் அடியோடு மாறச் செய்ய வேண்டும் சமுதாய மாற்றத்தோடு கூட தனி மனிதனுடைய வாழ்விலும் சுதந்தரமான மாற்றம் ஏற்படுத்தவேண்டும். இப்படிப்பட்ட ஒரு சிறந்த சாதனத்தை நாம் இப்பொழுது கண்டுபிடித்திருக்கிறோம். பூதான இயக்கத்தின் மூலம் இந்த மூன்று குறைகளும் நிறைவேறுகின்றன. இது காலத்தின் வேகம்—காலத்தின் கோரிக்கை. இதை நாம் நிறைவேற்றவேண்டும்.

### ஆயுதம்—சட்டம் இவற்றின் வழி

ஆயுத பலத்தின் மூலம் புரட்சி ஏற்பட முடியாது. ஏனெனில் அதில் எதிர் புரட்சி ஏற்படும் என்ற பயமிருந்து கொண்டே இருக்கும். எதிர்புரட்சி ஏற்படும் என்ற பயமிருக்கிற வரையில் புரட்சி நிலையானதாய், இருக்க முடியாது. மக்கள், வினேபாஜியிடம் ஆயுத சக்தியின் வழியை விட்டுவிடுங்கள். ஆனால் ஏன் சட்டம் இயற்றக்கூடாது? வினேபாஜிக்கு அரசாங்கத்தில் நல்ல செல்வாக்கு இருக்கிறது; காந்திய வாதிகளின் அரசாங்கம் ஏற்பட்டிருக்கிறது. இவர் தெருத்தெருவாக அலைந்து சிறிது-சிறிது நிலம் வாங்குவதற்கு பதில், 'சட்டம் இயற்றுங்கள். இதன் மூலம் நிலப்பிரிவினை நடைபெறும்; சரியான புரட்சி ஏற்படும்' என்று ஏன் சர்க்காரை வற்புறுத்தக்கூடாது? என்று கேட்கிறார்கள். சட்டத்தினால் புரட்சி ஏற்படும் என்றால் நாம் அதைச் செய்யத் தயாராக இருக்கிறோம்.

### சட்டத்தின் எல்லைகள்

நாம் சட்டத்தின் விரோதிகளல்ல; ஆனால் சட்டத்தின் சில எல்லைகளை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். சட்டத்திற்கு ஒரு சந்தர்ப்பமும், அதிகாரமும் அவசியமாகிறது. மக்கள்மேல் அதிகாரம் செலுத்துவதை சட்டம் தானே செய்ய முடியாது. சட்டத்தின் மீது நமது முதல் வெறுப்புக்குக் காரணம் இதுதான்! தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இயற்றியிருப்பதை அனைவரும் அறிவார்கள். ஆனால் மிகவும் படித்தவர்கள், அறிஞர்கள் வீடுகளில் கூட தீண்டாமை மனப்பான்மை இருப்பதை நான் பார்க்கிறேன். சட்டசபையின் உறுப்பினர்கள் — அமைச்சர்கள் இல்லங்களில்கூட இதே நிலைதான்! இதே காரணத்தால்தான் மனித சமுதாயத்திற்கே நல்வழி காட்டுகின்ற பெரியார் வினேபா அடிகளை வைத்தியநாதர் ஆலயத்தில் பூசாரிகள் தடிகளால் தாக்க முடிந்தது. அது அவர்கள் தடிகளால்

அடித்த அடி அல்ல ; நம் மக்களிடையே ஏற்பட்டுள்ள பிளவு மனப்பான்மையே விநோபாவின் உடலில் பட்டது.

**சில மேற்கோள்கள்**

பெண்ணுக்கு பதினான்கு வயதிற்கு முன்னால் மணம் செய்யக்கூடாது என்று சாரதா சட்டம் இயற்றப்பட்டது. பீஹாரில் சுற்று பயணம் செய்யும்பொழுது ஒரு M. L. A. வீட்டிற்குச் சென்றேன். அவருடைய பெண்ணிற்குத் திருமணம் இளம் வயதிலேயே ஆகியிருந்தது. நான் அவரிடம், தாங்கள் மக்கள் சபை உறுப்பினர் ; சட்டம் அறிந்தவர்கள் ; ஆனால் தங்களுடைய பெண்ணிற்கு ஏழு வயதிலேயே மண முடித்திருக்கிறீர்களே ! என்று கேட்டேன். அதற்கு அவர் 'சட்டம் என்றால் காகிதத்தில் இருக்கிறது ! நாங்கள் கிராமத்தில் இருக்கிறோம் ; இது கிராமம் ; இங்குள்ள சமுதாயம் பழைய வழக்கங்களிலும், முறைகளிலும் நம்பிக்கை உடையது. அன்றியும் வீட்டில் பெரியவர்கள் வேறு இருக்கிறார்கள்' என்று சொல்லத் தொடங்கினார். சட்டம் அறிந்தவர்கள் ; சட்டத்தை மதிப்பவர்களின் நிலை இது ! சட்டம் அவர்களுடைய வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த இயலவில்லை.

**சட்டம் உள்ளத்தோடு ஒட்டியது அல்ல**

வற்புறுத்தலின் மூலம், பலாத்காரத்தின் மூலம் ஒழுங்கை சட்டம் ஏற்படுத்த முடியும். ஆனால் மனிதனுடைய எண்ணத்தை மாற்றும் வலிமை சட்டத்திற்குக் கிடையாது.

**சட்டத்தின் இரண்டாவது எல்லை**

சட்டம் அதிகாரத்தைத்தான் தர முடியும் ; ஆனால் அந்த அதிகாரத்தைப் பயன் படுத்தும் சக்தியைத் தரமுடியாது.

சுதந்திர பாரத அரசியல் நிர்ணயசபை பெண்ணுக்கு எல்லா உரிமைகளும் அளித்திருக்கிறது. ஆண்களோடு சரிசிகர் சமானமாக தோளோடு தோள் நின்று தேசத்தை நிர்மாணிக்கும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறது. ஆனால் இன்னும் ராஜஸ்தான், உத்திரபிரதேசம், பீஹார் ஆகிய இடங்களில் பர்தா முறையின் கொடுமையான • வழக்கம் அவர்களை நான்கு சுவர்களுக்குள் கைதியாக்கி வைத்திருக்கிறது. *சட்டத்தின் மூலம் புரட்சியும் ஏற்படுத்த முடியாது.

## மூன்றாவது எல்லை

நாம் சட்டம் இயற்றவும், அதை செயல் படுத்தவும் மக்களை ஆட்சியின் மீது அன்புள்ளவர்களாகவும், நம்பிக்கையுள்ளவர்களாகவும், செய்ய வேண்டும். அவர்களிடம் சென்று "உங்களுடைய சர்க்கார் டில்லி, பாட்னா, பம்பாய், கல்கத்தா, சென்னையில் இருக்கிறது; அது நீங்கள் வேண்டுவதைக் கொடுக்கும்" என்று சொல்ல வேண்டிவரும். ஆனால் மக்களிடம் இம்மாதிரியான தவறான செய்திகளைப் பரவச் செய்வதை நாம் விரும்பவில்லை. நாம் மக்களிடம் சர்க்கார் டில்லி, பாட்னா, பம்பாயில் இல்லை, நீங்கள் தான் சர்க்கார். ஏழு லக்ஷம் கிராமங்களில் வசிக்கும் அனைவரும் தான் அரசாங்கம். டில்லி, குவாலியர், பாட்னாவில் வசிப்பவர்கள், பம்பாயிலும், கல்கத்தாவிலும் வேலை பார்ப்பவர்கள் ஆகிய அனைவரும் மக்களின் பிரதிநிதிகள்; மக்களின் விருப்பப்படி — தேவைக்கேற்ப ஏற்பாடுகள் செய்து தரும் ஒரு மன்றமே அரசாங்கம்.

## ஆட்சியற்ற சமுதாயம்

புரட்சி வாதிகளின் முன் எந்தக் குறிகோள், எந்த லக்ஷிய சமுதாயத்தின் உருவம் இருக்கிறதோ, அவைகளில் அரசாங்

* Law can confer a right upon you, but law can never give you the strength to enjoy the right.

கத்தை சமுதாயத்தோடு ஒன்றுபடுத்தும் இறுதிக் கட்டத்தின் சித்திரமும் வைக்கப்பட்டிருக்கிறது. சர்வோதய சமாஜமும் ஆட்சியற்ற சமுதாயத்தை அமைக்கவே விரும்புகிறது. ஆட்சியற்ற — தண்டனையில்லாத சமுதாய அமைப்பு திட்டம் சர்வோதயத்தின் மூலனும் இருக்கிறது. புரட்சிக்குப் பின்னும் அரசாங்கத்தை சமுதாயத்தோடு ஐக்கிய படுத்தும் முயற்சியை மேற்கொள்ளாவிட்டால், இன்று ருஷ்யாவில் இருப்பதைப் போல திரும்பவும் கேந்திர சர்க்கார்கள் பலப்பட்டுவிடும். இன்று ருஷ்யாவில் அரசாங்கம் கடவுளைவிடக் கூடவலிமை வாய்ந்ததாக, எங்கும் நிறைந்ததாய் ஆகி விட்டது! ஆகையால் சட்டத்தை அமுல் நடத்தும் இந்த வழி நமது லக்ஷியத்தை நோக்கிச் செல்லாது, தவறான திசை நோக்கிச் செல்லும் வழி இது.

### புரட்சியின் தோற்றம்

நாம் சட்டத்தின் விரோதிகளல்ல என்பதை மீண்டும் தெளிவாக்க விரும்புகின்றேன். ஆயுத பலத்திற்கு எதிராக — தண்ட சக்தியிலிருந்து வேறுபட்ட மக்கள் சக்தியை எழுச்சிபெறச் செய்யும் முயற்சியில் நாம் இன்னும் முழு வெற்றி பெறவில்லை. நமக்கு முன்னால் காட்சியளிக்கும் புரட்சிகரமான சமுதாயத்தின் சித்திரத்தை நாம் சட்டத்தின் மூலம் நிறைவேற்றிக்கொள்ள முடியாது. குடியரசில் முதலில் மக்களின் மனமாற்றம், பிறகு அரசாங்கத்தின் அனுமதி முத்திரை இதுதான் மக்கள் புரட்சியின் முறை. முதலில் சட்டம், பிறகு மக்களின் மனமாற்றம் என்பது சர்வாதிகாரமாகும்.

### தானமும் வேள்வியும்

நான் இச்சட்டத்தின் தன்மையைப்பற்றி சுருக்கமாகக் கூறினேன். இப்பொழுது 'தானம்' 'வேள்வி' இவற்றின்

முறைகளைப் பற்றிச் சொல்லுகிறேன். "ஆயுத பலம் இல்லை —தண்ட சக்தியில்லை; ஆனால் தானம் வாங்குவதை மட்டும் ஏன் ஆரம்பித்திருக்கிறீர்கள். இவ்வாறு தானம் கேட்பது பிச்சை கேட்டு யாசிப்பது போன்றது" என்று மக்களில் சிலர் கூறுகிறார்கள். இவ்வாறு பொறுப்பின்றி பேசுவது அந்தப் பெரியாருக்கு—வினோபாஜிக்கு பெரிய அநியாயத்தை செய்வதேயாகும். விநோபா, வியக்கத்தக்க விஞ்ஞான அறிவு படைத்தப் பெரியார்; கல்வி, கேள்விகளில் இணையற்றப் பண்டிதர். சமஸ்கிருத மொழியில் அவருக்குத் தனியான புலமை உண்டு. சொற்களின் இலக்கணம், சந்தி, இயற்கை ஒலிகள் ஆகியவற்றை அவர் நன்றாக அறிந்தவர். தானம் என்ற சொல்லையும் அவர் ஒரு புனிதமானப் பொருளுட னேயே உபயோகிக்கிறார். எந்தப் பொருளையும் நியாய மாகப் பங்கிடுவதற்குத்தான் தானம் எனறு பெயர். சமமானப் பிரிவினையே தானம். யாசிப்பதின் பொருள் தானமல்ல! பிச்சை கேட்பதும் தானமல்ல! பணக்காரர் களுடைய வாயிலில் சென்று, நீங்கள் தானம் செய்யுங்கள் உங்களுக்கு முக்தி கிடைக்கும்; மோக்ஷமும் சுவர்க்கத்தில் உயர்ந்த இடமும் கிடைக்கும் என்று நாம் ஒன்றும் சொல்ல வில்லை. நாம் அவர்களுக்கு, சகோதரர், நாம் மக்களாட் சியை நிறுவியிருக்கிறோம். அவர்களுடைய ஆட்சியில் அந்த மக்களே பட்டினியால் வாடலாமா? மக்களாட்சி மலர்ந்தி ருக்கிறது; ஆட்சியும் சட்டமும் மக்களுடைய கையில் இருக்கிறது. ஆனால் ஏழைகளிடம் பசியும், ஒரு சிலரிடம் அளவுக்குமேல் செல்வமும் இருக்கிறது. ஏழ்மை, செல்வம், ஜனநாயகம் ஆகிய மூன்றும் சேர்ந்து இயங்க முடியுமா? ஒருபோதும் முடியாது. ஏழைகளுடைய ஆட்சியில், அவர் களே பசித்திருக்கவும், ஒரு சிலர் உடமை கொண்டு உல்லாச வாழ்வு வாழ்வதும் நடக்கக்கூடியதல்ல. விநோபாஜி கேட் கின்ற தானம் பண்டைய தானங்களைப் போன்று பணக் காரர்களின் செல்வத்தையும் செல்வாக்கையும் காப்பாற்று வதல்ல! இந்த தானம் செல்வத்தைப் பிரித்துக் கொடுப்

பதன் அறிவிப்பே; செல்வத்தைச் சேர்த்து வைத்ததற்கு பிராயச்சித்தம் செய்து கொள்ளும் வழி. விநோபாஜி இதைத் தனி மனிதனின் தார்மீக வாழ்வு நோக்கோடு மட்டும் தரவில்லை. இதை ஒரு முழு புரட்சிகரமான சமுதாய வாழ்வின் கண்ணோட்டத்தோடு பயன்படுத்துகிறார். இதுவே தானத்தின் மகிமை வாய்ந்த் புரட்சிகரமான அர்த்தம்.

### விநோபாவின் பெருமை வாய்ந்த தானம்

பீஹாரில் ரங்கா என்ற சிறிய சமஸ்தானம்; அதன் அரசர் விநோபாவை தனது வீட்டிற்கு அழைத்தார். விநோபா வீட்டை யடைந்ததும் அவர் மிகவும் பணிவுடன் நிலத்தின் எல்லாப் பத்திரங்களையும் விநோபாவிற்கு முன்னால் கொண்டு வந்து வைத்தார். பிறகு 'தாங்கள் எவ்வளவு நிலம் தானமாக எடுத்துக்கொள்ள விரும்புகிறீர்களோ, அதை எடுத்துக் கொண்டு மிகுதியைத் திருப்பித் தாருங்கள்' என்றார். ஒரு லக்ஷம் ஏக்கரா நிலம் இருந்தது. அனைத்தையும் விநோபா எடுத்துக் கொண்டார். மேலும் 2500 ஏக்கரா நிலத்தையும் எடுத்துக்கொண்டார். மீதமிருந்த 2500 ஏக்கராவைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, சிரித்துக்கொண்டே 'முதல் தவணையைப் பெற்றுக்கொண்டு போகிறேன். நான் தற்பொழுது திருப்பிக்கொடுத்த நிலமும் தங்களிடம் இருக்கக் கூடாது. 1957க்குள் இந்த நிலங்களையும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்றார். ஒருவர் எவ்வளவு நிலம் உழுது பண்படுத்த முடியுமோ, அவ்வளவு நிலத்தின் மீது தான் உரிமை பாராட்ட முடியும் — தன்னிடம் வைத்துக் கொள்ள முடியும். கூலியாட்களை வைத்து வேலை வாங்கலாம் என்று கனவு காண்பதை விட்டுவிடுவதைத் தவிர வேறு வழியில்லை. முதலாளி — தொழிலாளி என்ற வேற்றுமை நீக்கப்பட வேண்டும். உற்பத்தி சாதனங்கள் உற்பத்தியாளர்களுக்கே அளிக்கப்படவேண்டும். உற்பத்தி செய்யாதவர்களுடைய முதலாளித்துவ முறை விலக்கப்பட

வேண்டும். இதுவே வினோபாவின் பெருமை வாய்ந்த தானம். இதையும் நீங்கள் பிச்சை கேட்பது — யாசிப்பது என்று கூறினீர்களானால், மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு, கேட்போர், கொடுப்போர், கொள்வோர் அனைவருக்கும் மதிப்பும் மரியாதையும் தரத்தக்க வேறுவழி என்ன இருக்கமுடியும்? அனைவருக்கும் சமமான மலர்ச்சி — மாற்றம் தரக்கூடியது இந்த தானத்தின் வழிதான்!

223159.

### மேலும் சில உதாரணங்கள்

பிஹாரில் என் கண்களால் கண்ட காட்சி; இராமகட் அரசர் தன்னுடைய குடும்பத்தாரோடு மூன்று லக்ஷம் ஏக்கரா நிலம் தானமாகக் கொடுத்துவிட்டு, வினோபாஜியின் சாந்தி சேனையின் ஒரு சாதாரண ஊழியராக, இரவும் பகலும் வேலை செய்து கொண்டிருக்கிறார். ராஞ்சி ஜில்லாவில் பால்கோட் சமஸ்தானத்தில் நான் வேலை செய்து கொண்டிருந்தேன். அதன் அரசர் சுமார் ஆயிரம் ஏக்கர் தானமாகக் கொடுத்து விட்டார். தன்னுடைய மகன் — மகள் இருவருடனும் என்னோடு, அவரை யாரும் அரசரென்று அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு, நாள் முழுதும் உழைத்தார். குர்சைலாவில் தர்பாங்கா அரசர் தன்னுடைய மனைவியுடன் வினோபாவிடம் சென்று, ஒரு லக்ஷத்து இருபதினாயிரம் ஏக்கரா நிலத்தை அவரடிகளில் சமர்ப்பித்து 'இயக்கத்திற்கு என்னால் முடிந்த அளவு ஊழியம் செய்யத் தயாராக இருக்கிறேன்' என்று கூறி நின்றார். கயா ஜில்லாவில் ஜெயப்பிரகாஷ் அவர்களுடன் நான் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தேன். அபாவத் — டிகாரியின் இளவரசர் ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்களில் தனக்கும் தன்னுடைய குடும்பத்தாருக்கும் 30 ஏக்கரா மட்டும் வைத்துக் கொண்டு மீதியுள்ள அனைத்தையும் பூதானம் செய்துவிட்டு, இதன் வெற்றிக்காக நம்முடன் சேர்ந்து வேலை செய்யத் தொடங்கினார்.

### மயிர் சிலிர்க்கக்கூடிய சக்தி

நீங்கள் சட்டத்தின் மூலம் நிலத்தைப் பிடிங்கிக்கொள்ள முடியும். ஆனால் பாவேயின் தானத்தைப்போல் பணக்காரர்களின் உள்ளத்தில் புரட்சியை — ஏழைகளின் மீது அவர்களுக்கு அன்பை சட்டத்தின் மூலம் உண்டாக்க முடியுமா? இதனாலேயே ஜவஹர்லால் நேரு அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் "ஏழ்மையையும் முதலாளித்துவத்தையும் ஒழிப்பதில் — பணக்காரர்களின் அனுதாபத்தையும் சர்மதத்தையும் பெறுகின்ற வினோபாஜியின் வழி, தன்நிகரற்று நிகழ்கிறது" என்று கூறினார். வரலாற்றில் இதற்கு முன்னால் ஒரு போதும் இது போலக் கண்டதில்லை. இதில் மனிதர்களின் அனுதாபமும், வர்க்க பேதங்களின் அழிவும் நிகழ்கிறது. இன்று வரை உலகம் வர்க்கப் போராட்டங்கள் இல்லாமல் வர்க்க பேதங்களை—பூசல்களைப் போக்க முடியாது. இது சமுதாய வாழ்வின் அடிப்படை தத்துவம் என்றெல்லாம் கூறிவந்தது. இன்று ஒரு புரட்சிக்காரர் முன்னேறி வருகிறார்; ஒரு புனிதமான முனிவர் பாரத முழுவதிலும் நன்னெறி ஊட்டி வருகிறார். வர்க்க பேதங்களை போராட்டமில்லாமல், கலகமில்லாமல், வெறுப்பில்லாமல் ஒழிக்கலாம் என்று கூறுகிறார். மக்களின் ஒத்துழைப்பு, — வர்க்கபேதங்களின் அழிவு; ஏழைகளின் உழைப்பு; அதோடு செல்வர்களின் ஒத்துழைப்பு, இதுவே தானத்தின் சக்தியில் முழு அளவில் நிறைந்துள்ள தத்துவம். ஏட்டளவில் மட்டுமல்லாமல் உண்மையிலேயே நமக்குக் கடமையுணர்வை ஊட்டுகிறது.

### குடியரசின் ஆதாரம்

பஞ்சாப்—பெப்சுவில் நான் பூதான யாத்திரை செய்து கொண்டிருந்தேன். அப்போது ஒரு சீக்கியர் "பீஹார்காரர்கள் ஒன்றுமறியாதவர்கள். ஆகவே நிலங்களைக் கொடுத்து

விட்டார்கள். கொஞ்சம் பஞ்சாபிற்கு வந்து பாருங்கள், நிலம் வாங்குவதில் உள்ள சிரமம் தெரியும். இங்குள்ள மக்களுக்கு கடுமையான வார்த்தைகளைத் தவிர, அன்பான சொற்களைத் தெரியாது!" என்று சொன்னார். நான் அவரிடம், சகோதரரே, தங்களுக்கு மக்கள் இதயங்களில் மண்டிக் கிடக்கும் நல்ல எண்ணங்கள்மீது நம்பிக்கை இல்லை. மனிதனுடைய நல்ல எண்ணங்களில் தங்களுக்கு மதிப்பு இல்லாவிட்டால், மக்களாட்சி நிறுவும் உரிமையும் உங்களுக்குக் கிடையாது. குடியரசில் ஒவ்வொரு வயது வந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் எந்த நம்பிக்கையின்மீது ஓட்டுரிமை யளித்தீர்கள்? மனிதர்களுடைய இதயங்களின் நல் எண்ணத்தின் மீதுள்ள நம்பிக்கையால் தான்! ஒவ்வொருவரும் நல்லவற்றை நாடியே வாழ விரும்பி வருகிறார். இதன் மீது நமக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் நாம் ஒரு லக்ஷிய சமுதாயத்தை உருவாக்க முடியாது. நாம் சர்வாதிகாரத்திற்கு அடிபணிய நேரிடும். நாம் ஜனநாயகத்தை உயிருள்ளதாகவோ, வெற்றியுடனோ நடத்த இயலாது.

## அனைவருக்குள்ளும் ஆண்டவன்

ஆண்டவன் ஏழைகளின் இதயங்களில் மட்டும்தான் இருக்கிறாரா? பணக்காரர்களிடம் இல்லையா? அனைவரிடமும்தான் இருக்கிறார். நாம் சுதந்திரமாகப் பேய்த்தனம் ஆட்சி புரிவதை என்றுமே அனுமதித்ததில்லை. இதுவே இந்திய நாகரீகத்தின் சிறப்புக்கு—தனித்தன்மைக்கு எடுத்துக்காட்டு. நம்முடைய வரலாற்றில் இராவணன் இறக்கிறான்; ஆனால் அவனுடைய உயிரொளிக்கிளம்பி இராமனுடைய இதயத்துடன் ஒன்றுபட்டு விடுகிறது. கம்சனும் சிசுபாலனும் மரித்தார்கள்; அவர்களின் உயிரொளி நீலமேகனின் உள்ளத்தோடு கலந்து உறவு பூண்டு விட்டது. நாம் கடவுளை எங்கும் நிறைந்தவராய், அனைத்தும் அறிந்தவராய், இணை

யிலா வல்லமை உடையவராய் மதிப்பவர்கள். செல்வர்களின் உள்ளத்தில் ஆண்டவன் இல்லை என்று கூறுவோமானால், அவரை நடுவு நிலையினின்று பிறழச் செய்து ஒரு சார்புடையவராக ஆக்கியவர்களாவோம்.

**ஒரு உணர்ச்சி மிக்க சம்பவம்**

புத்தகத்திலுள்ள விஷயங்களை வேண்டுமானால் விட்டு விடுங்கள். நான் கயா ஜில்லாவில் யாத்திரை செய்த பொழுது நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன். நான் அங்குக் கால்நடையாக யாத்திரை செய்த பொழுது என்னுடன் இரண்டு, மூன்று கல்லூரி மாணவர்களும் இருந்தார்கள். ஒரு சமஸ்தானத்தை நாங்கள் தாண்டிச் சென்று கொண்டிருந்தோம் அது மிகவும் சிறிய சமஸ்தானம். நண்பர்கள் அனைவரும், "இந்த கிராமத்திற்குச் செல்வது வீண். இங்குள்ள அரசன் மிகவும் முரடன்; குடிகாரன்; சூதாடி, இவனுடைய உள்ளத்தை மாற்ற முடியாது," எனக் கூறினார்கள். அதற்கு, மக்களில் கடவுளுடையக் காட்சியைக் காண நாம் புறப்பட்டிருக்கிறோம். அந்தக் காட்சியைக் காணாமல் கோயிலுக்கு வெளியேயே திரும்பி விடுவதா? வினோபாவின் இயக்கம் வேடிக்கை விளையாட்டல்ல இதில் மனித நம்பிக்கையின் அடிப்படை உண்மை அடங்கி இருக்கிறது. இதுவே மனித நம்பிக்கையின் உறைவிடம். இன்று மனித நம்பிக்கையோடு கூடிய சமுதாயம்—புரட்சியின் சக்தி, நமக்குத் தேவை என நான் பதில் கூறினேன்.

**மகானின் தோற்றம்**

காலத்தின் தேவைக்கேற்ப யாராவது மகான்கள் உதயமாகிக் கொண்டே இருக்கிறார்கள். சத்தியத்தில் நம்பிக்கைக் குறைந்த காலம் இருந்தது. அப்போது சத்தியத்தில் நம்பிக்கையும், நல்ல குணங்களும், புத்துயிர் பெற்றன. இதையே

நாம் இராமவதாரம் என்று கூறுகிறோம். ஆசையற்ற கர்ம யோக சக்தியை ஒருகாலம் எதிர்நோக்கியது. அப்பொழுது கண்ணன் உருவில் அது உயிர் பெற்றது. இன்று மனித நம்பிக்கை குறைந்திருக்கிறது. இப்பொழுது நம்பிக்கையும் —நற்குணங்களும் புத்துயிர் பெறத் தொடங்கி இருக்கின்றன! இதையே நாம் வினோபா என்று சொல்லுகிறோம்.

## சம்பவத்தின் வர்ணனை

நண்பர்கள் உடன்படாது வேறு கிராமத்திற்குப் போய் விட்டார்கள். நான் தனியாக அரசருடைய வீட்டிற்கு சென்றேன். நண்பகல் நேரம். வராண்டாவில் சுகமாகப் படுத்திருந்தார். நான் கதவைத் தட்டினேன். அவர் 'யார்' என்றார். தங்களுடைய சகோதரி வந்திருக்கிறாள் என்றேன். நான் இவ்வாறு கூறியதும் அவர் திடுக்கிட்டார். முன்னால் வந்து, யாரோ பைத்தியத்தைப் பார்ப்பது போலப் பார்த்தார்! அவர் "இவ்வளவு தூரம் எப்படி வந்தாய்? கிராம மக்கள் நான் எவ்வளவு கெட்டவன் என்பதை உன்னிடம் சொல்லவில்லையா? என்னிடம் நல்ல மனிதர்களுக்கு என்ன வேலை இருக்கிறது? நீ ஒரு இளம்பெண். திரும்பிப் போய்விடுவதுதான் நல்லது" என்று கூறினார். நான் அவரிடம், "சகோதரரே தாங்கள் முரடனாய், குடிகாரராய், சூதாடியாய் இருந்தால் எனக்கென்ன? ஒரு கேள்விக்கு பதில் சொல்லுங்கள். தங்களுக்கு தாயோ சகோதரியோ இருக்கிறார்களா? இல்லையா? ஒரு முனிவரின் செய்தியை எடுத்துக்கொண்டு — ஒரு ஆண்டியின் கருத்தைத் தாங்கி தங்களுடைய வாயிலை அடைந்திருக்கிறேன். பேசாமல் திரும்பிச் செல்பவள் இந்த சகோதரி அல்ல? பூமிதான இயக்கம் என்ற ரக்ஷையுடன் வந்திருக்கும் இந்த சகோதரி தன்னுடைய சகோதரனை இதனால் பிணைக்காமல் திரும்பிப் போகமாட்டாள்" என்றேன்.

## உள்ளொளியின் விழிப்பு

அவரை உலகம் முரடன், மூர்க்கன், கெட்டவன் என்றெல்லாம் கூறியது. ஆனால் அவருடைய, கண்களில் கண்ணீர் துளிர்க்கத் தொடங்கியது. கண்ணீர் மட்டுமல்ல; அவரது உள்ளத்தில் உறங்கிக் கிடந்த நல்ல எண்ணங்கள் உயிர்பெற்றன; மனிதத்தன்மை பொங்கி வழிந்தது. நான் இளமையிலிருந்து அநேக இடங்களுக்கு யாத்திரை செய்திருக்கிறேன். ஆனால் அன்று அந்த மனிதரின் கண்களிலே—கண்ணீரிலே கண்ட கடவுளின் காட்சியைப் போல நான் ஹரித்துவாரத்திலோ, ரிஷிகேசத்திலோ ஏனைய இடங்களிலோ காணவில்லை. கைகூப்பி வணங்கி 'சகோதரி, உள்ளே வாருங்கள்' என்றார். கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தார். கூட்டத்தில் தன்னிடமிருந்த 500 ஏக்கரா நிலத்தில் 125 ஏக்கரா தானமாகக் கொடுத்தார். கிராம மக்களும் நிலம் கொடுத்தார்கள். நான்கு மணி நேரத்திற்குள்ளாக 215 ஏக்கரா நிலம் பெற்றுக்கொண்டு அந்த கிராமத்திலிருந்து திரும்பினேன். ஆகையால் மக்கள் தானம் கொடுக்க மாட்டார்கள் என்பது தவறான கருத்தாகும். பிரஹலாதனுக்கு தூணிலே காட்சியளித்த கடவுள் நமக்காக—ஏழைகளுக்காக செல்வந்தர்களின் இதயங்களில் தோன்றுகிறார்—தோன்றுவார்.

## ஆத்மசக்தியின் பிரகாசம்

வினோபா தெலிங்கானாவில் 'அன்பு முறையில் கேட்டே நிலம் பெறுவேன்' என்று பூதான இயக்கத்தைத் துவக்கிய பொழுது அறிஞர்கள் கேலி செய்தார்கள்; வாதப்பிரதிவாதங்கள் புரிந்தார்கள். ஆனால் வினோபாவின் வலிமை வளர்ந்துகொண்டே வந்தது; நிலம் குவிந்து கொண்டே இருந்தது. இன்று, இரண்டு அல்லது இரண்டரை ஆண்டுகளுக்குள்ளாக, தனியாக அலைந்து திரிந்து ஒரு பரதேசி

லக்ஷக்கணக்கான ஏக்கரா நிலம் சேர்த்துக்கொண்டு வருகிறார். புரட்சி இயக்க வரலாறுகளில் இது மதிப்புடையது அல்லவா? ருஷ்யாவில் புரட்சிக்கு 80 ஆண்டுகள் பிடித்தன; சீனாவில் 32 ஆண்டுகள் ஆயின; ஆனால் இங்கு இரண்டரை ஆண்டுகளுக்குள்ளாக பாரத முழுவதிலும் வினோபாஜி இயக்கத்தை வளர்த்து விட்டார். எல்லா அரசியல் கட்சிகளின் அனுதாபத்தையும் பெற்றிருக்கிறார். இன்று ஒருவருக்கும் இந்த இயக்கத்தின் மீது பகைமையில்லை.

## ஏழையின் தானம்: நமது வலிமையின் ஊற்று

'செல்வந்தர்களிடம் தான் தானம் வாங்குகிறீர்கள், சரி! ஏழைகளிடமும் ஏன் வாங்கவேண்டும்?' என்று கேட்கிறார்கள். உண்மையில் நாம் ஏழைகளிடமிருந்து வாங்கும் தானம் தான் நமது வலிமைக்கு ஊற்று. சமுதாயத்தில் செல்வந்தன், ஏழை என்ற வேற்றுமையை உண்டாக்கிய முதலாளித்துவப் பொருளாதார முறை யாருடைய உதவியினால் நிலைத்து நிற்கிறது? ஏழைகள் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். நூற்றுக்கு 95 பேர் ஏழைகள்; மீதமுள்ள ஐவர்தான் செல்வர்கள். இந்த 95% ஏழைகளும் சுரண்டலில் — கொடுமைகளில் செல்வந்தர்களுக்கு உதவி செய்யாவிட்டால் அவர்கள் செல்வர்களாக வாழமுடியுமா? ஒரு முறை திலகர் "ஒன்றரை லக்ஷம் ஆங்கிலேயர்கள் 40 கோடி இந்தியர்களை ஆறு யிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து ஆளுகின்றார்கள். இது அவர்களுடைய வீரத்தால் அல்ல. இந்தியர்களுக்கு தன்னம்பிக்கையும், தைரியம், வீரம் முதலியனவும் குறைந்தது தான் காரணம். உணர்வு பெற்று ஊக்கமுடன் நிமிர்ந்து நின்று சுதந்திரம் எனது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவேன்; இல்லாவிட்டால் அந்த முயற்சியிலேயே மறைவேன், என்று உறுதிமேற் கொள்ளுங்கள்" என்றார். இதுபோலவே இன்று வினோபா ஏழைகளிடம்

"நிமிர்ந்து நில்லுங்கள். பசி இனிப்பொறுத்திடோம்; நிலமும் நிதியும் பிரித்தினிது வாழ்வோம்" என்று முழக்குங்கள் என்கிறார். கோடிக்கணக்கான ஏழைகள் ஒன்று சேர்ந்து விட்டால், செல்வந்தருக்காகத் தனிச்சட்டம் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஆயுதம் தாங்கி பலாத்காரம் மேற்கொள்ள வேண்டியதில்லை; அவர்களை இறைஞ்சி ஏவல் கேட்டு நிற்க வேண்டியதுமில்லை. ஏழைகளின் ஐக்கியத்திலேயே ஏழ்மையையும், முதலாளித்துவத்தையும் அழிக்கும் சக்தி இருக்கிறது. இதன் மூலம் முதலாளித்துவப் பொருளாதார முறை ஒழியும். ஆகவே ஏழைகளிடம் தானம் பெறுவது விஞ்ஞான ரீதியான முறை.

### ஏழ்மைக்கும் — முதலாளித்துவத்துக்கும் காரணம்

ஏழ்மையும், முதலாளித்துவமும் எங்கிருந்து உற்பத்தியாகிறது? ஏழ்மைக்கும் முதலாளித்துவத்திற்கும் — முதலாளித்துவத்தின்மீதுள்ள நமது ஆசைதான் காரணம். இன்று ஏழையாக இருப்பவன் செல்வத்தை விரும்பாததாலா ஏழையாக இருக்கிறான்? இல்லை. அவனும் செல்வனாகவே விரும்புகிறான். அதில் — செல்வனாகும் முயற்சியில் அவன் தோல்வியுற்றதினால் ஏழையாக வாழ்கிறான். தோல்வியுற்ற செல்வந்தனின் பெயர் ஏழை; வெற்றிப்பெற்ற ஏழையின் பெயர் செல்வந்தன். மனிதன் மனதில் முதலாளித்துவ எண்ணம் இருக்கும் வரையில் சமுதாயத்தில் சேர்க்கும் எண்ணமும் — ஆளும் ஆசையும் இருக்கவே செய்யும். அதுவரையில் சுரண்டலின் ஆணிவேரை சமுதாயத்திலிருந்து அகற்ற முடியாது. ஏழை — பணக்காரர் இருவருடைய உள்ளங்களிலிருந்தும் ஆளும் எண்ணம், சேர்க்கும் ஆசை இரண்டையும் நீக்கிவிட வேண்டும்.

### மறையது கண்ட மகான்

விநோபா ஒரு முனிவர். முனிவர் மறையதின் பொருளுணர்ந்து அதை வெற்றிபெறச் செய்யும் தன்மை வாய்ந்தவர்.

வர்க்கபேதமற்ற சுரண்டலில்லாத, ஆட்சியற்ற சமுதாயத்தை — இராம ராஜ்யத்தை அமைக்க விரும்புகிறோம். இதற்கு முதலாளித்துவத்தை நீக்கிவிட்டு காந்தீயம் அல்லது மற்றமற்ற கொள்கைகளைக் கொண்டு வருவது மட்டும் போதாது என்பதை வினோபா கண்டு கொண்டார். மனிதர்கள் அனைவருடைய இதயங்களிலிருந்தும் சேர்க்கும் ஆசையை அகற்ற வேண்டும். இதற்காகவே வினோபா தனிச்சொத்துரிமை — முதலாளித்துவம் இரண்டிற்கும் ஒரு புது முறையைப் புகுத்தி வருகிறார்.

### தரித்திர நாராயணனுக்குக் காணிக்கை

நமக்கு ஏழைகளிடமிருந்து கிடைக்கும் தானத்தின் தார்மீக சக்தி செல்வர்களின்மீது விழுகிறது. நான் ராஞ்சி ஜில்லாவில் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு கிராமத்திற்குச் (கோதரோ) சென்றேன். நிலமுடைய சகோதரர்கள் வந்தார்கள். ஒருவர் தன்னிடமுள்ள 50 ஏக்கராவில் 13 ஏக்கரா நிலம் தானமாகக் கொடுத்தார். மற்றொருவர் 25 ஏக்கரில் மூன்று ஏக்கராக் கொடுத்தார். கூட்டம் முடிந்து திரும்பும்பொழுது ஒரு மரத்தின் மறைவிலிருந்து, கந்தல் உடுத்திய ஒரு சகோதரி முன்னால் வந்தாள். 'என்னிடமிருக்கும் 40 சென்ட் நிலத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்' என்றாள். உடன் இருந்தவர்கள் சிரிக்கத் தொடங்கினார்கள். "சகோதரி, இவள் வேலைக்காரி; எங்கள் வீடுகளில் பாத்திரம் தேய்க்கிறாள்; இவளிடம் மொத்தமே 40 சென்ட் நிலம்தான் இருக்கிறது; இவளுக்கு இரண்டு பெண்கள் வேறு இருக்கிறார்கள். இவளிடமிருந்து தானம் வாங்குவீர்களா" என்று கேட்டனர். நான் அவளிடம் 'உன்னிடமிருந்து தானம் வாங்கலாமா? இந்த 40 சென்டையும் வினோபாவின் பிரசாதமாகத் திருப்பி எடுத்துக்கொள். நீ உழுது பாடுபட்டு வாழத் தயாராக இருந்தால் நிலத்தைப் பங்கிடும்பொழுது உனக்கும் நிலம் தருகிறோம்' என்று கூறி

னேன். அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. கைகூப்பி வணங்கி, "நான் ஏழை என்பதால் என்னுடைய தானத்தைத் திருப்பித் தருகிறீர்களா? செல்வந்தர்களின் தானத்தை மட்டும் ஏற்றுக்கொண்டீர்கள். இந்த ஏழையின் தானத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டீர்கள். விதுரருடைய எளிய உணவு கடவுளுக்குப் பிடித்தமாக இல்லையா? குசேலருடைய அவல் கண்ணனுக்கு ஆனந்தமளிக்க வில்லையா? அவ்வாறிருக்கும்போது இந்த ஏழையின் தானத்தை மட்டும் ஏன் திருப்பித் தருகிறீர்கள்?" என்று கேட்டாள். இதற்கு நான் என்ன பதில் கூறுவது? அவளுடைய வாதத்தை ஏற்றுக் கொண்டேன். அடி பணிந்து நான் அவளை வணங்கி தரித்திர நாராயணனின் அந்தக் காணிக்கையுடன் மேலே சென்றேன்.

### மற்றவர்களுக்கும் தூண்டுதல்

மறுநாள் காலை எழுந்ததும் எனது இருப்பிடத்திற்கு முன்னால் அந்த கிராமத்தின் எல்லா நிலச்சுவான்தார்களையும் சந்தித்தேன். அவர்கள் தானமளித்தார்கள். மேலும் அவர்களில் ஒருவர் "சகோதரி, எங்களால் இரவு முழுவதும் உறங்கவே முடியவில்லை. ஒரு ஏழை வேலைக்காரி எழுந்து தன்னிடமிருந்த 40 சென்ட் நிலத்தையும் தானம் செய்து விட்டாள். 50 ஏக்கராவில் நான் 13 ஏக்கரா நிலம் தான் கொடுத்தேன். இது சரியல்ல. மேலும் 17 ஏக்கரா எழுதிக் கொள்ளுங்கள்' என்றார். முதல் நாள் 50 ஏக்கராவில் 3 ஏக்கரா கொடுத்தவர், இன்னும் 14 ஏக்கர் நிலமளித்தார். மீதமிருந்த நிலச்சுவான்தார்களும் மேலும் கொஞ்சம் நில தானம் செய்தார்கள். அந்த ஏழைப்பெண் செய்த தானத்தின் சக்தி இது.

இவ்வாறு உதாரணங்களை கூறிக்கொண்டே சென்றால் இதிலேயே நேரம் சென்றுவிடும். ஏழையிடமிருந்து ஏன் நிலம் பெறுகிறோம்? இதற்கு விஞ்ஞான ரீதியான காரணம்

இருக்கிறது. முதலாளித்துவம் நீக்கப்பட்ட பிறகு, சிறியதும் பெரியதுமாக ஏழை மக்கள் இருப்பார்கள். சிலருக்கு 5 ஏக்கரா இருக்கும். மேறு சிலருக்கு 15 ஏக்கரா இருக்கும். அனைவரையும் சமமாக ஒன்றுபடுத்த நாம் என்ன செய்ய வேண்டும்? இதைப்பற்றியும் சிந்திக்கவேண்டும். ருஷ்யா வில் முதலாளித்துவம் அகற்றப்பட்ட பிறகு ஸ்டாலினுக்கு முன்னால் சிறிய சிறிய குடியானவர்களின் பிரச்னை எழுந்தது. பூமியை வசப்படுத்திக் கூட்டுப்பண்ணை அமைக்கும் முறைக்கு அப்பொழுது குடியானவர்கள் தயாராக இல்லை. ஸ்டாலின் அவர்களை சமாதானப்படுத்த இயலவில்லை. இதன் விளைவு 40 லக்ஷம் குடியானவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். இரத்த ஆறு ஓடியது. இன்று பணக்காரர்களை அகற்றுவதற்காக ஒரு இயக்கம்; நாளை சிறிய சிறிய குடியானவர்களை ஒன்றுபடுத்தி கூட்டுறவு முறையை அமைக்க ஒரு போராட்டம் ஏற்பட வேண்டுமா? ஆகவே ஏழை மக்களுக்குள் ஒருவருக்கு மற்றவர்மேல் அனுதாபத்தையும் நாம் பூதான இயக்கத்தின் மூலம் உண்டாக்க வேண்டும்.

### சிறிய — பெரிய சுரண்டல்காரர்கள்

எல்லா பொருள்களின் கருத்தும், சாரமும் ஒன்றுதான். சுரண்டல் இன்று சமுதாயத்தில் எங்கும் பெருகி இருக்கிறது, ஏழை, பணக்காரர் என்ற பேதமில்லாமல்! நாமனைவருமே சுரண்டுபவர்கள். சிலர் கொஞ்சமாகவும் — சிலர் அதிகமாகவும் சுரண்டுகிறார்கள். அவ்வளவுதான் வேற்றுமை. 5 ஏக்கரா உடையவரோடு ஒப்பிடும்பொழுது 25 ஏக்கரா உள்ளவர் பணக்காரராக மதிக்கப்படுகிறார். 25 ஏக்கரா உடையவரை 100 ஏக்கரா உடையவரோடு ஒப்பிடும்பொழுது சிறிய பணக்காரராக மதிக்கப்படுகிறார். ஒவ்வொருவரும் தனக்குக் கீழ்நிலையில் உள்ளவர்களை அமுக்கி வைத்திருக்கவே முயற்சி செய்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு மனித

னுடைய இதயத்திலிருந்தும் சுரண்டுகின்ற மனப்பான்மை அகலவேண்டும்.

### பிரிக்கும் முறையின் ரகசியம்

நமக்கு எந்த கிராமத்திலிருந்து நிலம் கிடைக்கிறதோ, அந்த கிராமத்திலேயே உள்ள நிலமில்லாதவர்களுக்கு அதைப் பிரித்துக் கொடுக்கவேண்டும். பிரிவினை வினோபாஜி யின் திட்டப்படி நடைபெறுகிறது; பிறகு யார் வேண்டு மானாலும் பிரித்துக் கொடுக்கலாம். நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதற்காக விருப்பு வெறுப்பற்றவர்களை வினோபாஜி நியமிக்கிறார். அவர்கள் ஒரு கமிட்டியாக்கப்படுகிறார்கள். அந்தக்கமிட்டியில் அரசாங்கப் பிரதிநிதிகளும் இருக்கிறார் கள். அரசாங்கம் அதற்கு சம்மதமளிக்கிறது. பிரிவினைக் காக சட்டம் இயற்றப்படுகிறது. ஹைதராபாத் சமஸ்தானத் திலும், மத்திய பிரதேசம், உத்கல், உத்திரபிரதேசம் ஆகிய வற்றிலும் சட்டம் இயற்றப்பட்டுவிட்டது. வேறு மாகா ணங்களிலும் சட்டம் இயற்றிக் கொண்டிருக்கிறார்கள். முதலில் அமைக்கப்பட்ட அந்தக் கமிட்டி தாலுக்கா வாரியாக ஜில்லா வாரியாக உப கமிட்டிகளை அமைக்கின்றன. பிறகு கமிட்டி உறுப்பினர்களும், அரசாங்க அதிகாரிகளும் தேவை யான ரிக்கார்டுகளுடன் பிரிவினை நடைபெற வேண்டிய பகுதிக்குச் செல்கிறார்கள். இங்கு பிரிவினை நடைபெறத் துவங்குகிறது. இந்தக் கமிட்டியார் 8 அல்லது 9 நாட்கள் அங்கு தங்கி நிலத்தை சர்வே செய்கிறார்கள். அங்குள்ள நிலமில்லாதவர்கள் எத்தனை பேர், அதில் யார் யார் நிலம் பெறத் தகுதி வாய்ந்தவர்கள் என்பதை எல்லாம் ஆராய்ந்து கண்ட பிறகு, ஏழு நாள் நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது. பொதுச் சபையில் நிலப்பிரிவினை நடைபெறுகிறது. பொதுச் சபையிலேயே நிலப்பிரிவினை நடைபெற வேண்டும் என்பது பிரிவினைத் திட்டத்தின் இரண்டாவது விதி. அந்த

சபையில் நிலமற்ற சகோதரர்கள் கூடுகிறார்கள். ஒரு அங்குலம் கூட நிலமற்ற, உழைத்து — உழுது பிழைக்கக்கூடிய, வேறு எந்தத் தொழிலும் செய்யாத, எதற்கும் முதலாளியாக இல்லாதவர்களுக்கு, நன்செய் நிலமாக இருந்தால் தலைக்கு ஒரு ஏக்கரும் புன்செய் ஆக இருந்தால் 5 ஏக்கர் வீதமும் பங்கிடப்படுகிறது. நிலம் மிகவும் கொஞ்சமாக இருப்பவர்களுக்கு மேலும் நிலம் தரப்படுகிறது. ஹைதராபாத் சமஸ்தானத்தில் சிற்சில இடங்களில் புன்செய் நிலம் தலைக்கு 20–21 ஏக்கர் வரையிலும் கொடுக்கும்படி நேர்ந்தது. உத்திரப் பிரதேசத்தில் நன்செய் நிலம் 4 ஏக்கர் வரையிலும், புன்செய் 13-14 ஏக்கர் வரையிலும் கொடுக்கும்படி நேர்ந்தது. நிலம் கொடுக்கும்பொழுது குடியானவர்களுக்கு மூன்று நிபந்தனை விதிக்கப்படுகிறது. முதலாவதாக அவனுக்கு நிலத்தை விற்கும் உரிமை கிடையாது. உத்கலிலும், சோட்டா நாகபுரியிலும் ஆதிவாசிகளுக்கு அரசாங்கம் அளித்த நிலத்தை குடியிலும், சூதிலும் நான்கு-ஐந்து மாதங்களுக்குள்ளாகவே அவர்கள் இழந்துவிட்டதை நீங்கள் அறிந்திருக்கலாம். பிறகு பசியோடும், ஆடையின்றியும், அல்லல்பட்டார்கள். ஆகவே நமது முதலாவது நிபந்தனை நிலத்தை விற்கும் உரிமை கிடையாதென்பது. நிலத்தை அடகு வைத்துப் பணம் வாங்கவோ குத்தகைக்கு விடவோ அவனுக்கு அதிகாரம் கிடையாது. இன்று ஒரு குடியானவனுக்கு நிலம் கொடுக்கிறோம். இரண்டு-மூன்று மாதங்களில் அவன் இறந்துவிட்டால், அவனது மகன் நிலத்தில் பாடுபடுபவனாக இருந்தால், அந்த நிலத்தின் மீது அவனுக்கு உரிமை உண்டு. அப்படி இல்லாமல் நகரத்தில் எங்காவது வேலை செய்பவனாக இருந்தால் அவனுக்கு நிலத்தின்மீது எவ்வித உரிமையும் இல்லை. நிலம் கமிட்டியிடமே திரும்பவும் ஒப்புவிக்கப்பட்டு, வேறு நிலமற்ற உழைக்கும் குடும்பத்திற்கு கொடுக்கப்படும். உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்பதே நமது கொள்கை. உற்பத்தி செய்பவர்களிடம்தான் உற்பத்தி சாதனமும் இருக்க வேண்டும்.

### சாதன தானம்

இந்த நிலத்துடன் இயன்ற இடங்களில் நாம் சாதனங்களும் கொடுக்கிறோம். கலப்பை, எருதுகள், விதை, பாசனவசதி இல்லாவிட்டால் கிணறு ஆகிய உதவிகளை பூதான — பக்கு சமிதியார் இயன்ற அளவு செய்கிறார்கள். இதற்காக சாதன தானம் துவக்கப்பட்டது.

### நிலப்பிரிவினை முதல்படி

இந்தியா விவசாய நாடு. ஆகவே இங்குப் புரட்சியின் கர்த்தாக்கள் உழவர்களே! 80% மக்கள் கிராமங்களில் வசிக்கும் நாட்டில் முதலில் கிராமங்களில் நிலப்பிரிவினை செய்யப்பட்டு, அதன் பிரச்னை தீர்ந்தபிறகு மீதமுள்ள 20% மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கலாம். உற்பத்தி செய்யாத வர்களுக்கு நிலத்தின்மீது உரிமையில்லை என்பதைப் போலவே, தொழில் துறைகளிலும் உற்பத்தி செய்யாத வர்களுக்கு உரிமை இருக்கக்கூடாது. அப்பொழுதுதான் ஏழ்மையும், முதலாளித்துவமும் அடியோடு அழியும். விநோ பாஜியும் அவருடைய நண்பர்களும், அஹிம்சை முறையில், சத்தியாக்கிரக நெறியில், ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்க இயலா விட்டால், அதே முயற்சியில் செத்துமடிவோம் என்ற உறுதியோடு முன்னேறி வருகிறார்கள்.

### தொழிற்சாலைகளின் மீது மக்கள் ஆதிக்கம்

பெரிய தொழில் நிலையங்களையும், பாக்டரிகளையும் நாம் பிரிக்க முடியாது. 100 ஏக்கரா நிலம் இருந்தால் அதை 10-10 ஏக்கராக, 10 பேருக்குக் கொடுத்தால் நிலமும், நில உரிமையும் பிரிக்கப்பட்டு விடுகிறது. தொழிற்சாலைக்கு முதலாளிகள் இருக்கிறார்கள் என்றால், அந்த இடத்தில் 4000 ஊழியர்களுக்கு உரிமை அளித்தால் குழப்பம்தான் ஏற்படும். ஆகவே தொழில் நிலையங்களைப் பிரிக்க முடியாது. அதன்

மீது சமுதாயத்திற்கு உரிமை ஏற்படுத்த வேண்டும். அதை சமுதாய உடமையாக்க வேண்டும்.

### உற்பத்தி செய்யாத தொழில் செய்பவர்கள்

நகரங்களில் இவர்கள் நிறைந்திருக்கிறார்கள். நகரங்களில் வசிப்பவர்களில் பெரும்பான்மையோர் இவர்களே! வாடகையின் மூலம், தரகின் மூலம், வட்டியின் மூலம் இவர்கள் வாழ்கிறார்கள். இவைகளெல்லாம் வியாபாரங்களாகி விட்டன. இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். மக்கள் செய்கின்ற குற்றங்களினால் வாழ்வதும் ஒரு தொழில். அவர்களை வக்கீல்கள் என்கிறோம். மக்களின் உடல் நோயைக் காரணமாகக் கொண்டு சிலர் வாழ்கிறார்கள். அவர்களை டாக்டர்கள் என்கிறோம். நோயாளி, பாவம் நோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருப்பான். ஆனால் பணம் பறிக்க டாக்டருக்கு அதுதான் தகுந்த சந்தர்ப்பம். குற்றவாளி தான் செய்த குற்றத்திற்காக மிகவும் வருந்திக்கொண்டிருப்பான். வக்கிலுக்கோ அதிகமான பணம் வாங்க அதுவே தக்க சமயம். இவைகளெல்லாம் சமுதாய விரோதத் தொழில்கள். இந்த மாதிரியான தொழிற்பிரிவுகள் இருக்கும் வரையில் ஒருவரின் கஷ்டம் மற்றவருக்கு நல்ல சந்தர்ப்பத்தையும், சூழ்நிலையையும் உண்டாக்குகிறது. இம்மாதிரியான நிலை இருக்கும்வரையில் சமுதாயத்தில் சுரண்டலுக்கு முடிவு ஏற்படாது. சமத்துவமான அரசாட்சியை நாம் அமைக்க முடியாது. ஆகையால் பொருள் உற்பத்தியில்லாத இம்மாதிரியான வேலைகளை தொழில் முறையாக செய்யாமல் சேவை மனப்பான்மையுடன் செய்ய வேண்டும். இவைகளைப்பற்றிய நம்முடையத் திட்டம் இதுதான். இதற்காகவே பூதான இயக்கத்தின் பிரிவாக சம்பத்து தானம் துவக்கப் பட்டது.

### சிரம தானம்

இன்று சமூகத்தில் உற்பத்தி செய்யும் உழைப்புக்கு மதிப்பில்லை. ஆகவே அனைவரும் உழைக்காது வாழ முயற்சிக்கிறார்கள். உழைப்பதில் யாருக்கும் மகிழ்ச்சி இல்லை. இன்று உழவர்களும், உழைப்பாளிகளும் கூட உழைப்பில் மகிழ்வு காண்பதில்லை. உற்பத்தி செய்யும் உழைப்பிற்கு சமூகத்தில் கௌரவமும் மதிப்பும் ஏற்படாத வரையில் நாம் உழைக்காமல் வாழவே முயல்வோம். உழைக்காமல் வாழ முயன்றால் உண்ணும் கூட்டம் — உழைக்கும் கூட்டம் என்ற இரண்டு பிரிவுகள் இருக்கும். வர்க்கபேதம் இருக்கும் வரையில் சுரண்டலிருக்கும். சுரண்டலிருக்கும் வரையில் நாம் இராமராஜ்யம் அமைக்க முடியாது. இதனால் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் உழைப்புக்கு மரியாதை ஏற்படுத்துவதற்காக வினோபாஜி, பூதான இயக்கத்தின் நான்காவது பகுதியாக சிரம தானம் ஆரம்பித்தார்.

### புத்தி தானமும், சமய தானமும்

வினோபாஜி மீண்டும் அடுத்த பகுதியாக புத்தி தானம் — சமயதானம் இரண்டையும் ஆரம்பித்துள்ளார். வினோபா, ஆளும் எண்ணமற்ற — செல்வத்தின் மீது ஆசை வைக்காத — மதிப்பை விரும்பாத மகான் என்பதை நீங்கள் அறிவீர்கள். உலகமே அவருக்கு திரணமாகப்படுகிறது. அப்படிப்பட்ட யோகியினுடைய இயக்கம் இது. இவர் இதை யோக நிலை அறிவோடு ஆரம்பித்தார். இந்த இயக்கம் எந்த தத்துவத்தையும் — வாதத்தையும் தழுவியதல்ல; விருப்பு வெறுப்பற்றது. வாதம் ஒரு மனிதனை மற்றவனிடமிருந்து வேறு படுத்துவது. வினோபாவின் இந்த இயக்கம் வேற்றுமைகளையும், வெறுப்புகளையும் அகற்றி அனைவரையும் ஒன்றுபடுத்தி, நவஇந்தியாவை நிர்மாணிக்க தோளோடு தோள் நின்று தொண்டு புரியச் செய்கின்ற சிறந்த இயக்கம். இதற்கு உதவிசெய்து, முடிந்தஅளவு சுதந்திரமாக நம்மிடம்,

உள்ளவற்றை இதற்கு அர்ப்பணிக்க வேண்டியது நாமனைவருடைய கடமையாகும்.

### முதலாவது உதவி புத்தி தானம்

நடுநிலையாக நின்று இந்த இயக்கத்தைப்பற்றி சிந்தியுங்கள். காலம் வேகமான மாற்றம் அடைந்து கொண்டிருக்கிறது. உலக முழுவதும் ஜனநாயகத்தை காத்துக்கொள்வதற்காக இந்தியாவை பார்த்துக் கொண்டிருக்கிறது. பூதான இயக்கம் வினோபாவின் குரல் மட்டுமல்ல; கடவுளின் ஆசி வினோபாவின் மூலமாக வெளிப்படுகிறது. இந்த தானத்தை வினோபா வாங்கவில்லை; காலத்தின் வற்புறுத்தலே இதைச் செய்கிறது. இது காலத்தின் தேவை. ஆகவே நாமனைவரும் இதைப் பற்றி சிந்திப்பதிலும், பிரசாரம் செய்வதிலும் ஊழியர்களுக்கு உதவியாக இருக்கவேண்டும். உங்களுக்கு எவ்வளவு நிலம் கிடைக்கிறது — கிடைக்கவில்லை என்பதைப்பற்றிக் கவலை இல்லை. நிலங்களை, வினோபாவிடம் செல்வதிலிருந்து யாரும் தடுக்கமுடியாது. கங்கையின் நீரோட்டத்தைப் போல நில தானம் பெருகிக் கொண்டே இருக்கிறது. இப்பொழுது மக்களுடைய ஆட்சி நடைபெறுகிறது. ஒரு சிலர் செல்வத்தை சேர்த்து வைத்துக் கொண்டிருப்பது இனி நடவாத காரியம். இன்று செய்யப் படுகின்ற நிலப் பிரிவினை ஒரு புரட்சிகர சமூகத்தை, புதிய வாழ்வை மக்களுக்கு முன் நிலை நிறுத்தும். நிலப் பிரிவினையோடுகூட நாம் கிராமத் தொழில்களையும் பெருக்க வேண்டும். நிலத்தின் விளைச்சலை அதிகரிக்கும் முறைகளைக் கற்றுக்கொடுத்து ஒரு ஏக்கர் நிலத்தில் 5 ஏக்கர் விளைச்சலை உண்டாக்க வேண்டும். இந்த முயற்சியில் நீங்களனைவரும் ஈடுபட வேண்டும்.

**நிலமனைத்தும் நீலமேகனுடையதே!**

---

# அகில இந்தியாவில் பூதானம்

## 31—[illegible]—1956 வரையில்

### கிடைத்த நிலமும் வினியோகித்ததும்

| மாகாணம் | கிடைத்த நிலம் ஏக்கரா | தான பத்திரம் எண் | வினியோகித்த நிலம் ஏக்கரா | சம்பத்து தானம் ரூ. |
|---|---|---|---|---|
| பிஹார் | 24,41,684 | 2,99,390 | 85,690 | 10,680 |
| உத்திரபிரதேசம் | 5,76,728 | 24,709 | 1,14,174 | 24,189 |
| இராஜஸ்தான் | 3,74,667 | 5,760 | 18,049 | 48,511 |
| உத்கல் | 2,85,029 | 92,715 | 41,378 | 35,233 |
| ஹைதராபாத் | 1,52,664 | 8,437 | 37,044 | 25,229 |
| மத்தியபிரதேசம் | 1,35,265 | 31,045 | 41,907 | 19,325 |
| ஆந்திரா | 50,754 | — | — | — |
| மத்தியபாரத் | 47,505 | 5,939 | 678 | 14,651 |
| தமிழ்நாடு | 47,092 | 12,998 | 4,582 | 17,271 |
| குஜராத் | 44,252 | — | 10,886 | 7,682 |
| மகாராஷ்டிரம் | 30,846 | 7,235 | 3,983 | 42 |
| சௌராஷ்டிரம் | 30,819 | — | 5,818 | — |
| கேரளம் | 28,465 | 4,364 | 1,426 | 4,379 |
| பஞ்சாப்—பெப்சு | 15,497 | 3,563 | 1,010 | 53,705 |
| வங்காளம் | 11,580 | 6,550 | 1,963 | 20,817 |
| கர்னடகம் | 3,729 | 768 | 559 | 1,212 |
| டில்லி | 9,388 | 222 | 157 | 14,899 |
| மைசூர் | 9,065 | — | 100 | 424 |
| விந்தியபிரதேசம் | 8,370 | 1,668 | 927 | 4,394 |
| ஹிமாலய பிரதேசம் | 1,564 | 1,112 | 21 | 1,050 |
| அஸ்ஸாம் | 1,950 | — | — | — |
| பம்பாய் | 578 | 10 | — | 1,26,554 |
| ஆக மொத்தம் ... | 43,05,544 | 5,05,485 | 3,70,355 | 4,30,249 |

குறிப்பு:—ஒரிஸ்ஸாவிலும் இதர மாகாணங்களிலும் இதுவரை மொத்தம் 1037 கிராமங்கள் கிராமதானமாகக் கிடைத்திருக்கின்றன.

223159

# பூதான - சர்வோதயக் கருத்துப்புரட்சிக்கு

●

**"கிராமோதயம்"**

வாரப் பத்திரிகை — வருஷ சந்தா ரூ. 3.

வெளியிடுவோர் :

அகில பாரத சர்வ சேவா சங்கம்

காந்தி நகர், திருப்பூர்

●

**"சர்வோதயம்"**

மாதப் பத்திரிகை — வருஷ சந்தா ரூ. 3.

(ஒன்பதாம் ஆண்டு)

சர்வோதய பிரசுராலயம்

(அகில பாரத சர்வ சேவா சங்கம்)

தஞ்சாவூர்

●

எல்லா காதி வஸ்திராலயங்களிலும் கிடைக்கும்.

●

காந்தீய, சர்வோதய-பூதான

இலக்கியங்களின்


விபரங்களுக்கு :

**சர்வோதய பிரசுராலயம்**

24, சீனிவாசபுரம், தஞ்சாவூர்

PRINTED AT M. K. PRESS, TANJORE

சர்வோதய—பூதான இலக்கியத்திற்கு



சர்வோதய பிரசுராலயம், தஞ்சாவூர்